


வைகுந்தவாசம் நாடிய

# நாராயண மலர்

புலோலியைப் பிறப்பிடமாகவும்
மயிலிட்டியை வதிவிடமாகவும் கொண்ட

## பிரம்மஸ்ரீ சதா. நாராயண சர்மா

அவர்களின்

வருஷாப்திய

# நினைவு வெளியீடு

30-07-1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்

தேசம்புகழ்

# பிரம்மஸ்ரீ சதா. நாராயண சர்மா அவர்கள்

(சித்தானந்த ஐயர்)



அன்னை மடியில்:
1930-12-18

நாராயணர் அடியில்:
1998-08-09

## திதி வெண்பா

ஆண்டு வெகுதானிய சிராவணஞ்சேர் ஆடியிலே
தூண்டு அபரபக்கத் துதீயைதனில்—காண்டகைய
சதாசிவக் குருபெற்ற சித்தானந் தக்குருக்கள்
சதாசிவன் தாழடைந் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும் பொற்பதங்கள்

மாதங்கள் பல மறைந்தன
மாற்றங்கள் பல நிகழ்ந்தன - எனினும்
எம் நெஞ்சிருக்கும் வரை - உங்கள்
நினைவிருக்கும் - அதில் மனமிருக்கும்
உயிர் உள்ளவரை - உங்கள் நினைவில்
மாற்றங்கள் எதுவும் நிகழாது.

மனைவி, மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் இதயத்தின் அடி ஆழத்திலிருந்து....

*அன்பைக் காட்டி*
*ஆறுதல் அளித்து*
*இன்பம் தந்து*
*ஈகை உணர்த்தி*
*உள்ளம் களித்து*
*ஊர் சிறக்க*
*எண்ணெழுத்தறிவித்து*
*ஏற்றம் மிக அளித்து*
*ஐயம் அகற்றி*
*ஒருவரோடொருவர்*
*ஓருயிராய் இணைந்து*
*ஔவியம் அகற்றிய*
*எம் குடும்பத் தலைவனின்*
*பாதார விந்தங்களுக்கு*
*இம் மலரைச்*
*சமர்ப்பிக்கின்றோம்.*

**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மறக்கவில்லை

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்ற வள்ளுவன் வாக்கிற்கு இணங்க தனக்கென வாழா பெருந்தகையாளர் அமரர் சித்தாந்த ஐயா அவர்களின் வருஷாப்பியமாகிய இத்தினத்திலே பெயரினைப் போலவே சித்து + ஆனந்தம் ஆகிய இரண்டையும் தன்னகத்தே கொண்ட அமரரின் ஞாபகார்த்த நினைவாக அவர் எவ்வாறு மற்றவர்களுக்கு பலவகையிலும் தொண்டு புரிந்து பயன்தரக்கூடிய வகையில் வாழ்ந்தாரோ அது போல பலதரப்பட்டவர்க்கும் இந்நூல் பயனளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இதனை உருவாக்கியிருக்கிறோம். இதனைப் படிக்கும் அன்பர்கள் ஏதாவது ஒரு விதத்திலாவது பயன் அடைவார்களேயானால் அந்தப் பலன் அதனால் ஏற்படும் நிறைவு அவர் எந்த ரூபத்தில் இருந்தாலும் அவருக்கே சேரவேண்டும் என்று பிரார்த்தித்து அமைகின்றோம்.

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# திருநெறிய பாக்கள்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
    நிமலர்நீ றணிதிரு மேனி
வரைசெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
    வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
    அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
    கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
    பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
    திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
    ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
    வருகவென் றருள்புரி வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற்க அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா லூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.

## திருப்புகழ்

உப்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த

# சகல கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ?
சகம் ஏழும் அழித்து
உண்டான் உறங்க ஒளித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே! 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே! 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ?
உளங் கொண்டு தெள்ளித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே! 3

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே! 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே?
நெடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே! 5

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
எழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங் கொண்டு தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே! 7

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக்கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே!
சகல கலாவல்லியே! 8

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே! 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட அளவிற் பணியச்செய்வாய்!
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பலகோடி யுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகல கலாவல்லியே! 10

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

சதாசிவக்குருக்கள் + காமாட்சி அம்மா

- அமரர் குரோசம்மா +
- கண்மணி அம்மா +
- நாராயண சர்மா + தவமணி அம்மா
  - பத்மநாதக்குருக்கள் + மல்லிகாராணி
    - வைத்தீஸ்வரன்
    - சர்வேஸ்வரன்
  - சந்தானலக்ஷ்மி + சுகுமாரக்குருக்கள்
    - கானப்பிரியா
    - நித்தியானந்தி
    - குஹப்பிரியன்
  - வரலக்ஷ்மி + மகேந்திர சர்மா
    - லக்ஷ்மிநாராயணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதர்களின் வகை

மனிதர்களை நான்கு வகையினராகப் பிரிக்கலாம்

1. சந்தனக்கட்டை போன்றவர்கள்
2. பசுப் போன்றவர்கள்
3. மயில் போன்றவர்கள்
4. தேள் போன்றவர்கள்

### 1) சந்தனக்கட்டை போன்றவர்கள்

சந்தனக் கட்டையானது எவ்வாறு தான்தேய்ந்து - தன்னை வருத்தி பிறருக்கு மணம் கொடுக்கிறதோ அதுபோல தன்னை வருத்தி தியாகம் செய்து பிறருக்காக வாழ்பவர்.

### 2) பசுப் போன்றவர்கள்

பசுவிற்கு நாம் எந்த அளவிற்கு உணவு கொடுக்கிறோமோ அந்த அளவிற்கு அது பால்கொடுக்கும். அதுபோல தனக்கு என்ன ஆதாயம் கிடைக்கிறதோ அந்த அளவிற்கு உழைப்பவர்.

### 3) மயில் பேன்றவர்கள்

மயில் தானாக இறகு போடாது. அதைப்பிடித்துத்தான் இறைகைப் பிடுங்கவேண்டும். அதுபோல இந்தவகை மனிதரை நாமாகப் பணியாற்ற வைக்கவேண்டும்.

### 4) தேளைப் போன்றவர்கள்

தேளானது நன்மை செய்யாது கொட்டும் தன்மை கொண்டது. அதுபோல இந்தவகை மாந்தர்கள் நன்மை செய்யாமல் தீமையை செய்பவர்கள்.

## வீட்டின் தத்துவம்

வீட்டில் முதலில் இருப்பது 'படி' இது நம்மை அறிவு நூல்களை ஞான நூல்களை படிக்கவேண்டும் என்று கூறுகிறது. அடுத்தது 'நடை' நாம் படித்தபடி நடக்கவேண்டும் என்று கூறுகிறது. அடுத்து கூடம். அது சத்சங்கம். அதாவது ஞானியர்களிடம் நாம் நேரம் கிடைக்கும் போதெல்லாம் கூடி வாழவேண்டும் என்று அறிவுறுத்துகிறது. பக்கத்தில் 'முற்றம்' இலட்சியம் முற்றுப் பெற்றால் மோட்சம் கிட்டும். இது ''வீடு'' பேறு என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் கடைப்பிடிக்க வேண்டியவை

1) ஏழ்மையிலும் நேர்மையான வாழ்க்கை
2) கோபத்திலும் பொறுமையைக் கையாளுதல்
3) தோல்வியிலும் விடாமுயற்சியை கைக்கொள்ளுதல்
4) தரித்திரத்திலும் பரோபகார சிந்தை
5) துன்பத்திலும் தைரியத்தை கைவிடாமை
6) செல்வத்திலும் எளிமையாக வாழ்தல்
7) பதவியிலும் பணிவைக் காட்டுதல்

# இரண்டிற் பெருமை

| | |
|---|---|
| வருவதும் போவதும் இரண்டு | செல்வம் – தரித்திரம் |
| வந்தால் போகாதது இரண்டு | கீர்த்தி – அபகீர்த்தி |
| போனால் வராதது இரண்டு | மானம் – உயிர் |
| தன்னுடன் வருவது இரண்டு | பாபம் – புண்ணியம் |
| கண்கண்ட தெய்வம் இரண்டு | மாதா – பிதா |
| தானாக வருவது இரண்டு | இளமை – மூப்பு |
| அடக்க முடியாதது இரண்டு | ஆசை – துக்கம் |
| தவிர்க்க முடியாதது இரண்டு | பசி – தாகம் |
| நம்மால் பிரிக்க முடியாதது இரண்டு | பந்தம் – பாசம் |
| அழிவைத் தருவது இரண்டு | பொறாமை – கோபம் |
| எல்லோருக்கும் சமமானது இரண்டு | பிறப்பு – இறப்பு |

# உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டிய சில குறிப்புகள்

பார்த்துக் கெட்டது பிள்ளை
பார்க்காது கெட்டது பயிர்
இட்டுக் கெட்டது காது
இடாது கெட்டது கண்
கேட்டுக் கெட்டது குடும்பம்
கேளாது கெட்டது கடன்
உண்டு கெட்டது வயிறு
உண்ணாது கெட்டது உறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல அணிகலன்கள்

கண்ணுக்கு அணிகலன் கண்ணோட்டம்
காதுக்கு அணிகலன் நல்ல கேள்வி
வாக்குக்கு அணிகலன் சத்தியம்
மனதிற்கு அணிகலன் தியானம்
கரத்துக்கு அணிகலன் தானதருமம்
தான் உய்ய ஆன்றோர்க்கு தருவது தானம்
பிறர் உய்ய வறியோர்க்கு தருவது தருமம்

## வணங்க வேண்டியவை

ஆரோக்கியம் பெறவேண்டின் ஆதித்தனை வணங்கு
செல்வம் பெறவேண்டின் முருகனை வணங்கு
சுகம் பெறவேண்டின் திருமாலை வணங்கு
ஆற்றல் பெறவேண்டின் அம்பிகையை வணங்கு
கல்வி பெறவேண்டின் கலைமகளை வணங்கு
வீரம் பெறவேண்டின் துர்க்கையை வணங்கு
கஷ்டங்கள் நீங்கவேண்டின் கணபதியை வணங்கு
சிவபதம் பெறவேண்டின் சிவனை வணங்கு

## இருக்க வேண்டியவை

நிதி உள்ளவனுக்கு நீதி இருக்கவேண்டும்
தனம் உள்ளவனுக்கு தானம் இருக்கவேண்டும்
மனம் உள்ளவனுக்கு மானம் இருக்கவேண்டும்
மரணம் எல்லோருக்கும் நிச்சயம்உண்டு என்று தெரியவேண்டும்
ஆனால் அது நமக்கில்லை என்பது போல வாழ்கிறோம்.

## பயனில்லாதவை

மக்கள் இல்லாத வீடு பாழானது
நண்பர்கள் இல்லாத திசை பாழானது
கல்விஞானம் இல்லாதவனுடைய உள்ளம் பாழானது
உடன்பிறப்பு இல்லாதவனுடைய உடம்பு பாழானது
வறுமையுள்ளவனுக்கு எல்லாம் பாழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தனை செய்யவேண்டிய காலம்

எந்த வேளையிலும் இறைவனை நினைக்கவேண்டும் அது ஆரம்பத்தில் முடியாவிட்டால் மூன்று வேளைகளில் ஆயினும் தவறாது நினைக்கவும்,

1) காலையில் எழுந்ததும் இறைவனே நான் இன்று நல்லவழியில் நிற்க அருள்புரி என்றும்

2) உணவு உட்கொள்ளும்போது இறைவனே இந்த உணவினால் எனக்கு நல்ல அறிவும் அன்பும் உண்டாக அருள்புரி என்றும்

3) இரவில் படுக்கும்போது இறைவனே இந்த உறக்கத்திலே உன் எண்ணமே நிற்க அருள்புரி என்றும் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

## பேச்சின் தன்மை

1) அன்பாகப் பேசுக
2) இனிமையாகப் பேசுக
3) உண்மையாகப் பேசுக
4) சமயமறிந்து பேசுக
5) சபை அறிந்து பேசுக
6) சிந்தித்துப் பேசுக
7) நன்மையே பேசுக
8) பேசாதிருந்தும் பழகு

## நேரம் ஒதுக்கவேண்டிய விடயங்கள்

சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் அது இளமையின் ரகசியம்
சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் அது சக்தியின் பிறப்பிடம்
விளையாட நேரம் ஒதுக்குங்கள் அது இளமையின் ரகசியம்
படிக்க நேரம் ஒதுக்குங்கள் அது அறிவின் ஊற்று
நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள் அது அறிவின் மகிழ்ச்சிக்கு அழகு
உழைக்க நேரம் ஒதுக்குங்கள் அது வெற்றியின் விலை.

## மனிதன் வாழவேண்டிய வகை

சுறுசுறுப்பாக இரு ஆனால் படபடப்பாக இராதே
பொறுமையாக இரு ஆனால் சோம்பேறியாக இராதே
சிக்கனமாக இரு ஆனால் கருமியாக இராதே
அன்பாக இரு ஆனால் அடிமையாக இராதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே
கொடையாளியாக இரு ஆனால் ஓட்டாண்டியாகாதே
இல்லறத்தை நடாத்து ஆனால் காம வெறியனாகாதே
பற்றற்று இரு ஆனால் காட்டுக்கு போகாதே
வீரனாக இரு ஆனால் அயோக்கியனாக இராதே
நல்லோரை நாடு ஆனால் அல்லோரை வெறுக்காதே
இவ்வாறு வாழ்ந்தால் மனிதனும் தெய்வமாகலாம்.

## மனிதவாழ்வில் பொன்விழா, மணிவிழா, முத்துவிழாக் கொண்டாட்டங்களும் அவை கூறும் தத்துவங்களும்

நம்முடைய வாழ்வில் ஐம்பது, அறுபது என்பது என்று வயது நிறைவின்போது கணவன், மனைவி இருவரையும் சேர்த்துவைத்து கொண்டாடுவது வழக்கம்.

இல்லறமான வண்டிக்கு கணவன் ஒரு சக்கரம். மனைவி இன்னொரு சக்கரம். ஒரு சக்கரத்திலே வண்டி ஓடாது. இரண்டு சக்கரங்களும் பொருந்தி ஓடவேண்டும் அப்போதுதான் பயணம் வெற்றிகரமாக முடியும். இது வாழ்க்கைப் பயணத்துக்கும் பொருந்தும். இரண்டு சக்கரங்களும் ஒரே அளவிலே ஒரே நிலையில் இருக்க வேண்டும் என்பதைப்போல கணவன் மனைவி இருவரும் ஒருமித்த மனநிலையில் வாழ்க்கை நடாத்தினால்தான் அது பயனுள்ளதாக அமையும் இப்படி நடத்தப்பட்ட வாழ்க்கையை நாம் போற்றிக் கொண்டாடுகின்றோம். கணவன் – மனைவி இருவரையும் சேர்த்து வைத்துக் கொண்டாடுகின்றோம்.

நாம் காண்கின்ற பொருட்களில் பொன்னும் மணியும் உயர்ந்தவை. இப்பொன் நீ, இம்மணி நீ, இம்முத்து நீ என்று அப்பர் பெருமான் பாடியுள்ளார். பொன்னே, மணியே, பொருளே, அருளே என்று அருணகிரிநாதர் கந்தரனுபூதியில் கூறினார்.

பொன்னிலும் மணி உயர்ந்தது. மணியிலும் முத்து உயர்ந்தது உலகியலிலும் ஐம்பதாம் ஆண்டில் பொன்விழாவும், அறுபதாம் ஆண்டில் மணிவிழாவும், எண்பதாம் ஆண்டில் முத்துவிழாவும் கொண்டாடுகிறார்கள். பொன், மணி, முத்து மூன்றும் ஒன்றுக்கொன்று உயர்வு உடையன. மனிதனும் ஐம்பதில் உயர்ந்து பொன்னாக வேண்டும். அறுபதில் மேலும் உயர்ந்து மணியாக வேண்டும் எண்பதில் பந்தத்தில் இருந்து விடுபட்டு முத்தாக வேண்டும் இதை உணர்த்தவே விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திராட்சத்தின் மகிமை

## சிவசின்னங்களுள் ஒன்று உருத்திராக்ஷம்

உருத்திர — அக்ஷம் = உருத்திராக்ஷம். உருத்திராக்ஷம் என்றால் உருத்திரனது கண் என்பது பொருள். அக்ஷம் என்றால் கண். சிவபெருமானின் மூன்று கண்களில் இருந்து தோன்றிய காரணத்தினால் இவ்வாறு பெயர் பெற்றது.

## தோன்றிய வரலாறு

முன்னொரு காலத்தில் தாரகன் என்ற அசுரனை முருகப் பெருமான் வதம்செய்தார். அதனால் கோபம்கொண்ட அவனது புதல்வர்களான தாரகாக்ஷரன், கமலாக்ஷரன், வித்யுன்மாலி என்ற மூன்று அசுரர்களும் தங்களுக்குக் கிடைத்த வரத்தின் பலத்தினால் பொன், வெள்ளி, இரும்பு என்ற மூன்று உலோகங்களினால் ஆன கோட்டைகளை அமைத்துக் கொண்டு தமது தந்தையை அழித்த தேவர்களையும், பிரம்மா, விஷ்ணு முதலியோரையும் துன்புறுத்தி வந்தனர்.

அந்த அரக்கர்கள் அளித்த துன்பத்தை சகிக்கமுடியாமல் தேவர்கள் கருணாமூர்த்தியாகிய சிவபெருமானிடம் முறையிட்டனர். அதைக்கேட்ட சிவபெருமான் அடைக்கலம் புகுந்த தேவர்களைக் காப்பதோடு தம்மீது அன்புகொண்டு பூஜை செய்து வரும் அசுரர்களைக் காப்பதும் முறை என்று கருதினார். எனவே அவர் மௌனம் கொண்டு அதேசமயத்தில் தேவர்களின் துன்பம் நீங்கும் காலத்தை எதிர்நோக்கி தமது மூன்று திருக்கண்களில் இருந்து நீரை உகுத்துக்கொண்டிருந்தார்.

சூரிய வடிவமாகிய வலக்கண்ணில் இருந்து பொழிந்த நீரில் பன்னிரண்டு உருத்திராக்ஷமரமும், சந்திரவடிவமாகிய இடக்கண்ணில் இருந்து உகுத்த நீரில் பதினாறு உருத்திராக்ஷமரமும், அக்கினி வடிவில் விளங்கிய நெற்றிக் கண்ணில் இருந்து பொழிந்த நீரில் பத்து உருத்திராக்ஷ மரமும் தோன்றின.

இடதுகண்ணிலிருந்து வெண்ணிற உத்ருதிராக்ஷம் தோன்றியது. வலது கண்ணில் இருந்து கபில நிற உருத்திராக்ஷம் தோன்றியது. அதிலிருந்து முறையே செந்நிறமான உருத்திராக்ஷமும். பொன்னிற உருத்திராக்ஷமும் தோன்றின. நெற்றிக் கண்ணிலிருந்து கருநிற உருத்திராக்ஷம் தோன்றியது. இவற்றுள் ஒவ்வொன்றையும் சக்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணு, பிரமன், சப்த மாதர்கள், அஷ்டவித்யேஸ்வரர்கள், திக்கு பாலகர்கள், சதஉருத்திரர்கள், அஷ்டவசுக்கள், அசுவினி தேவர்கள் ஆதிசேடன், முனிவர் மற்றும் தேவகணங்கள் யாவரும் விருப்ப முடன் பெற்று சிவபெருமான் ஆணைப்படி தரித்து அசுரபயத்திலி ருந்து விடுபட்டார்கள் என்று புராணங்கள் வாயிலாக அறிகிறோம்;

இதன் வேறுபெயர்கள் அக்ஷம், கண்டி, கண்டிகை, கண்மணி என்பனவாகும்.

அக்ஷம் (கண்)

தன்னை அணிந்த அன்பர்களின் மும்மலங்களையும் நீக்கி திரு வருட்பேற்றைக் கொடுத்து சிவபெருமான் கண்போல் விளங்குவத னால் அக்ஷம் (கண்) எனப்பெயர் பெற்றது.

கண்டி — கண்டிகை

குற்றங்களைத் தண்டிப்பதனால் கண்டி கண்டிகை எனப் பெயர்பெற்றது.

கண்மணி

சிவபெருமானது திருக்கண்ணில் இருந்து பொழிந்து முத்துப் போன்ற நீர்வடிவாக இருப்பதால் கண்மணி எனப்பெயர் பெற்றது.

இதன் வகைகள்

உருத்திராக்ஷம் வெண்ணிறமணி, கபிலநிறமணி, செந்நிறமணி, பொன்னிறமணி கருநிறமணி என்று ஐந்து வகைப்படும். இவற்றுள் ஒவ்வொன்றும் ஒருமுகமணி முதல் பதினாறு முகமணி என எண்பது வகைப்படும்.

தரிக்க உரிய காலங்கள்

சிவமந்திரஜபம், சந்தியாவந்தனம், சிவபூஜை, சிவத்தியானம், சிவாலயதரிசனம், சிவபுராணபடனம், தேவார, திருவாசகப்பாரா யணம், தீர்த்தப் பாடல், விரதகாலம், சிரார்த்த தினம் முதலிய காலங்களில் ருத்திராக்ஷம் தரிப்பது அவசியம் என்று கூறப்படுகிறது.

தரிக்கும் விதம்

உடலின் வெவ்வேறு பாகங்களில் தரிக்கப்படும் ருத்திராக்ஷ மாலைகளுக்கு எண்ணளவு, எல்லையளவு என்று உண்டு. அவற்றை குடுமியிலே ஒரு மணியும், தலையிலே முப்பத்தாறு மணியும், காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொன்றிலும் ஒருமணி, அல்லது ஆறு மணிவீதமும் கழுத்திலே முப்பத்திரண்டு மணியும் புஜம் ஒவ்வொன்றிலும் தனித்தனியாக பதினாறு மணியும் கை ஒவ்வொன்றிலும் தனித்தனியாக பன்னிரண்டு மணியும் மார்பிலே நூற்றெட்டு மணியும் கொண்ட மாலையாகத் தரிக்கலாம்.

மேலும் கையில் தரிக்கும் மாலை கைபருமனாகவும் சிரமாலை சிரத்தின் அளவும், மார்பில் தரிக்கும் மாலை பிடரிமுதல் நாரியிலுமோ அல்லது மார்பு வரையிலுமோ இருப்பது அவசியம்.

## தாரண முறை

முகம் முகத்தைப் பொருத்தவும் அடிஅடியைப் பொருத்தவும் இடைஇடையே பொன், வெள்ளி, முத்து, தாமிரம், பவளம், பளிங்கு முதலிய மணிகளை இட்டு வெண்பட்டு, பருத்தி முதலிய நூல்களின் இருபத்தேழு இழை சேர்த்துக் கயிறாக்கி அதிற்கோர்த்து நுனி இரண்டையும் ஒன்றாக இணைத்து தரிக்கலாம். இவை அல்லாது நாகபாசம், பிரமக்கந்தி, சாவித்திரி முதலிய முடிச்சுக்களைப் போட்டுத் தரிப்பதும் சிறந்ததே.

## தரிக்கும் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நியமம்

ருத்திராக்ஷமாலையை குடுமியிலும் தலையிலும் ஈசான மந்திரம் சொல்லித் தரிப்பது அவசியம். காதுகள் இரண்டிலும் தற்புருஷ மந்திரத்தினாலும் கழுத்தில் அகோர மந்திரத்தினாலும் மார்பில் வியோம வியாபினி மந்திரத்தினாலும் தரிக்கவேண்டும்.

ருத்திராக்ஷ மாலையை அன்புடன் கண்களால் காண்பவர்களும் கைகளால் தீண்டுபவர்களும் கோடிமடங்கு நற்பலனைப் பெறுவர். சரீரத்தில் தரிப்பவர்கள் மேலும் மிகுதியான பலனை அனுபவிப்பர். கையில் கொண்டு ஜபிப்பவருக்குப் பலன் அதிகம்.

ஆறுமுக மணியை வலப்புயத்திலும் ஒன்பது முகமணியை இடப்புயத்திலும் பதினொருமுக மணியை சிகையிலும் பன்னிரண்டுமுக மணியை காதுகளிலும் பதிநான்கு முகமணியை சிரசிலும் தரிப்பது மிகவும் உத்தமம் என்று ஆன்றோர் கருதியுள்ளனர்.

## ருத்திராக்ஷ மணிகளின் அதி தேவதைகள்

ஒருமுக மணி அதி தேவதை — தத் பரமசிவன்
இருமுக மணி — ஸ்ரீகண்ட பரமசிவன்
மூன்று முகமணி — அக்கினி தேவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நான்கு முகமணி | — | பிரமதேவன் |
| ஐந்து முகமணி | — | காலாக்கினி உருத்திரன் |
| ஆறு முகமணி | — | சுப்பிரமணியர் |
| ஏழுமுகமணி | — | ஆதி சேஷன் |
| எட்டு முகமணி | — | விநாயகர் |
| ஒன்பது முக மணி | — | பைரவர் |
| பத்து முக மணி | — | விஷ்ணு |
| பதினொரு முக மணி | — | பதினொரு உருத்திரன் |
| பன்னிரண்டு முகமணி | — | பன்னிரு ஆதித்தர் |
| பதின்மூன்று முக மணி | — | குமாரக் கடவுள் |
| பதினான்கு முகமணி | — | சிவம் சக்தி |
| பதினைந்து முகமணி | — | சதாசிவம் |
| பதினாறு முகமணி | — | அனந்தேஸ்வரரும் |

அதி தேவதைகள் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

## ஜபமாலை இலக்கணமும் ஜபமுறையும்

மந்திரங்களை ஜபிப்பதற்கு ருத்திராக்ஷ மாலையை ஜப மாலையாக கொள்ளுவது மிகவும் விஷேசம்.

ஜப மாலைக்கு இரண்டு, மூன்று, பன்னிரண்டு பதின் மூன்று முக மணிகள் ஆகாது.

108, 54, 27 என்றும் மணிகளின் எண்ணிக்கையில் மாலைகள் அமைத்தல் நலம் யோகத்தை விரும்புகிறவர்கள் மேற்கண்ட மணிகளின் எண்ணிக்கை கொண்ட மாலையால் ஜபிக்கலாம்.

முத்தியை விரும்புகிறவர்கள் 25 மணிகள் கொண்ட மாலையினால் ஜபிப்பது நல்லது. ஜப மாலையை நாயகமணி இல்லாமல் அமைப்பதும் உண்டு, அதனால் அதிக பலன் இல்லை எனக் கூறுவர்.

ஜபிக்கும் போது ஜப மாலை மணிகள் ஒன்றோடு ஒன்று உரசி ஓசை ஏற்பட்டால் பாவம் என்பர்.

ஜப மாலையை நடுவிரல் மூன்றிலும் வைத்து பெரு விரலால் தள்ளி ஜபிக்க வேண்டும்.

முக்தியை விரும்புவோர் மணிகளை மேல்நோக்கியும் போகத்தை விரும்புவோர் கீழ் நோக்கியும் தள்ளி ஜபிக்க வேண்டும். நாயக மணியைக் கடந்து ஜபித்தல் பாவம் என்று சொல்லப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜபமாலை செய்யும்போது ஒரேவிதமான முகங்களையுடைய மணிகளாகக் கொள்ளவேண்டும். பலவித முகங்களுடைய மணிகளைக் கலந்து ஜபித்தல் குற்றமாகும்.

ருத்திராட்சத்தை ஜபமாலையாகக் கொண்டு ஜபிக்கும்போது நூற்றெட்டு அல்லது முப்பது மணிகளைக் கொண்ட மாலையால் ஜபித்தால் ஐஸ்வர்யம் உண்டாகும்.

இருபத்தேழு மணிகள் உள்ளவற்றால் ஜபித்தால் அழியாத பதவி செல்வம் சேரும். இருபத்தைந்து மணிகள் கொண்ட மாலையால் ஜபித்தால் சிவ சாயுச்சியமும் முத்தியும் சித்திக்கும். பதினைந்து மணிகள் கொண்ட மாலையால் ஜபம் செய்வது சுபகரமாகும் என வாயுசங்கிதையில் கூறப்பட்டுள்ளது.

ருத்திராக்க மணியால் ஜபிப்போர் நாயகமணியை எண்ணிக் கையில் சேர்க்காது ஜபிக்க வேண்டும்.

சுட்டுவிரலால் மணிகளைத் தள்ளினால் சத்துரு வெற்றியும் அணிவிரலினால் வியாதி நீக்கமும் சிறுவிரலால் தள்ள சகல நன்மையும் ஏற்படும்.

## பூசிக்க சிறந்த ருத்திராக்ஷங்கள்

ஒரு முகமணி, ஐந்து முகமணி, பதினொரு திருமுகமணி பதிநான்குமுகமணி இவையே பூஜிப்பதற்கு மிகவும் சிறந்தவையாகும். இவைகளில் ஏதாவது ஒன்றை நாள்தோறும் அர்ச்சித்து வழிபடுவோர் மேலான செல்வத்தை அடைவர் என்று வேதசிவாகமங்கள் கூறுகின்றன.

## உருத்திராக்ஷ மரம்

உருத்திராக்ஷ மரங்கள் ஏறத்தாழ இருபத்தைந்துக்கு மேற்பட்டவை உள்ளன.

சாதாரணமாக இந்த மரம் அதிக உயரம் வளர்வதில்லை. இலைகள் ஈட்டிபோல இருக்கும். இலைகளின் காம்புகளில் இருந்து கொத்துக் கொத்தாக வெள்ளை நிறப்பூக்கள் பூத்து, கருநீறப் பழங்களாக மாறும். இதிலிருந்து ஐந்து முகமணி கிடைக்கிறது.

மற்றொருவகை மரம் நூறு அடி உயரமும், பன்னிரண்டு அடி சுற்றளவும் உள்ள பெரிய மரமாக வளரும். இதில் உள்ள பழங்களில் நெடுக்காக ஒரு நீண்ட பள்ளமான கோடு உண்டாகும். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூர்வமாக தோன்றுவது. இதை ஏகமுக உருத்திராக்ஷம் என்று சொல்வார்கள்.

உருத்திராக்ஷம் சிறந்தது என்று அறிய நீரில் போட்டால் அது மூழ்கவேண்டும் மிதந்தால் அது பத்ராகம் எனப்படும்.

உருத்திராக்ஷத்தை உடம்பில் தரிப்பதால் ஆன்மீகப் பலனோடு மருத்துவப்பலனும் உண்டு என்று ஆன்றோர் கூறியுள்ளனர்.

## வில்வ மரத்தின் சிறப்புகள்

வில்வ மரத்தில் ஸ்ரீ மஹாலட்சுமி வாசம் செய்கிறாள். இதற்குச் சான்றாக லக்ஷ்மி ஸகஸ்ர நாமத்தில் ''வில்வ நிலையாயை நம'' என்பதும் ''பில்வ ப்ரியா'' என்பதும் ஆகும். ஒரு வில்வ தளமானது லக்ஷம் ஸ்வர்ண புஷ்பங்களுக்கு சமமானது. ஒரு வில்வ தளத்தை பரமேஸ்வரனுக்கு அர்ப்பணம் செய்தால் மஹா தோஷங்கள் நீங்கி ஸகல சேமங்களும் உண்டாகும் என்று பல சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. விஷேடமாக அதர்வண வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் 108 வில்வ சுலோகங்களை மாசி மாதம் கிருஷ்ண பக்ஷம் சதுர்த்தசியில் மாலையில் சிவசந்நிதியில் சொல்லி அர்ச்சனையோ பாராயணமோ செய்தால் சர்வமங்களங்களும் உண்டாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

வில்வ தளம் காய்ந்து போனாலும், வேறு கிடைக்காத பட்சத்தில் அதனைப் பாவிக்கலாம் என்பதும் ஒருமுறை அர்ச்சனை செய்ததை மீண்டும் அர்ச்சனைக்கு எடுத்து பயன்படுத்தலாம் என்பதில் இருந்துமே அதனின் சிறப்பைப் புரிந்து கொள்ளலாம். பில்ப தளம் என்ற வடமொழிச் சொல்லு வில்வதளம் என்று தமிழில் திரிபடைந்து உள்ளதை அன்பர்கள் கவனிப்பார்களாக.

## ஆடைகள் அணியும் முறை

நாம் அணியும் உடைகள், மறைப்பு அலங்காரம் இவைகளுக்காக மட்டுமல்ல ஆரோக்கியத்துக்கும் முக்கியமானதாகும். இது தொடர்பாக நூலின் தன்மை, நிறம், ஆடையின் குணம் கவனிக்கப்பட வேண்டும். பழைய காலத்தில் பருத்தி, பட்டு, நார்ப்பட்டு மரவுரி, ஆட்டுரோமம் இவைகள் இயற்கைப் பொருட்கள்.

நவீன காலத்தில் பெரும்பாலும் ஆடைகள் அலங்காரமாய் கருதப்படுகின்றன. ஆரோக்கியம் இலட்சியமில்லை. இதனால் தோல் நோய், மனோ நோய் உண்டாக காரணமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்கைப் பட்டு, நார்ப்பட்டு துணிகள் பருத்தித் துணிகளைப் போல் வேர்வை நீரை உறிஞ்சிக் கொள்ளாது. கம்பளத்தைப் போல் உஸ்ணத்தைக் காக்காது. தேகத்தை ஒட்டி நூல் துணியும், அதற்கு மேல் கம்பளமும் குளிர் காலத்துக்கு ஏற்றது.

ஆடைகளின் நிறங்களை ஒட்டி சில குணதோஷங்களை சாஸ்திரங்கள் விவரிக்கின்றன.

### வெண்ணிற ஆடை

வாதம், பித்தம், கபம் என்ற மூன்று தோக்ஷங்களை சீர் செய்யும். ஆயுள், அறிவு பலம் பெருகும்.

### மஞ்சள் நிறம்

உஷ்ண ஆதிக்கம் நீர்களுக்கு இருமல், தோல் கடி, இவைகளைப் போக்கும்.

### பச்சை நிறம்

உள் வெப்பம், கபதோஷம் நீங்கும். குளிர்ச்சி, மனதுக்கு பூரிப்பு தரும்.

### கறுப்பு நிறம்

இருமல், காய்ச்சல், விஷம், பித்த ஆதிக்கம், மந்தம் இவைகள் நீங்கும்.

### சிவப்பு நிறம்

அணிவதால் வியாதி அதிகரிக்கும்.

ஆடை உடுத்தும் ரீதியில் நவீன முறைகள் சுகத்திற்கு விரோதமாயிருக்கின்றன. அலுவல்களுக்கு தகுந்த உடைகள் அணியும்படி நேர்ந்தாலும் வீடுகளிலாவது நேர்மையான வழியில் வஸ்திரங்களை உடுப்பது தான் நலம். பெண்மணிகள் முகம் தவிர மற்ற அங்கங்கள் முழுமையும் மறையும்படி ஆடை அணிவது உத்தமம் என்று கருதலாம்,

## இளமையும் - பதவியும்

இளமையும் பதவியும் நிரந்தரமானதல்ல. வயது முதிர, முதிர இவ்விரண்டும் நீங்கிவிடும்.

இளமையில் உள்ளவர்கள் வயது முதிர்ந்தவர்களைப் பார்க்கும் போது தமக்கும் இந்த கதி வருமென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவியில் உள்ளவர்கள் தம் பதவி போனால் பிறரும் கீழே பணி செய்தவர்களும் எவ்வாறு தம்மிடம் நடந்து கொள்வார்கள் என்பதைப் பதவியில் உள்ளபோது அவ்வப் போது நினைத்துப் பார்க்க வேண்டும்.

மற்றும் இளமையில் உள்ளவர்கள் பெரியவர்களுக்கு மதிப்பளித்து நடக்க வேண்டும். பதவியில் உள்ளவர்கள் தம் கீழே பணி புரிபவரிடம் மனிதாபிமானத்துடனும் அன்புடனும் நடக்க வேண்டும்.

அப்பொழுதுதான் இவ்விருவருமே பிற்காலத்தில் வருந்த வேண்டிய அவசியம் இருக்காது.

## உபவாசத்தின் பெருமை

உபவாசம் என்பது அருகில் இருத்தல் என்று பொருள்படும். அதாவது இறைவனுக்கு அருகில் நம்மை கொண்டு செல்லும் ஒரு சாதனம் உபவாசம் ஆகும்.

உபவாசத்தால் தூய்மை, ஒருமைப்பாடு, உடல் நலம் இவைகள் உண்டாகும். உபவாசத்தால் பட்டினியின் துயரம் நன்கு விளங்கும். இதுபோல்தானே உணவு கிடைக்கப்பெறாத ஏழைகள் பசியால் துயரம் அடைவார்கள் என்ற எண்ணம் நிச்சயம் உண்டாகும். ஆகவே உபவாசத்தால் இரக்கம் விளையும்.

மஹா சிவராத்திரி, வைகுந்த ஏகாதசி, கந்தசஷ்டி முதலிய விரதகாலங்களில் விரதம் இருந்து மறுநாள் பாரணை பண்ணும் போது பலருக்கு அமுது படைக்கின்றார்கள். இது இன்றும் நடைமுறையில் உள்ளது.

பணம் படைத்தவனுக்கு எல்லா வசதிகளும் இருப்பதினால் அவனுக்குப் பசியே தெரியாது. அவன் உபவாசம் இருப்பதனால் பசியை அறியமுடிகிறது. பசியை அறிந்து பசித்தோர்க்கும் உதவும் பரிவான குணம் உபவாசத்தால் ஏற்படுகின்றது.

எனவே உபவாசம் என்பது சிறந்த சாதனம் என்பதை நாம் வாழ்வில் உணர்ந்து கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துளசிச் செடியின் மகிமை

1) துளசிச் செடியானது வாடிக்கருகினாலும் கங்கை நீர்போன்று புனிதமானது.

2) துளசியைப் பழிப்பவனும் அதைக் காலால் மிதிப்பவனும் விஷ்ணுவின் சினத்துக்கு ஆளாகின்றான்.

3) திருமணம் ஆகாத கன்னியர் வீட்டில் துளசிக் கல்யாணம் செய்து அந்த இலையை கோவிலுக்கு அர்ப்பணித்தால் விரைவில் மாங்கல்யம் கிடைக்கும்.

4) தேவாலயம், நந்தவனங்கள் போன்ற இடத்தில் துளசிச் செடியையோ அல்லது வில்வ மரத்தையோ வைத்து தினசரி நீர் வார்ப்பவர் ''அஸ்வமேத பலன்'' பெற்று தேவலோகத்தில் சகல ஐஸ்வரியங்களையும் பெறுகிறான்.

5) துளசி இலையை கையில் எடுத்துக்கொண்டு என் பக்தன் எங்கு சென்றாலும் நான் அவனைப் பின் தொடர்வேன் என்று பகவான் கீதையில் கூறுகிறார்.

6) அசிங்கமான வார்த்தைகள் பேசியவனும் உண்ணக் கூடாத பொருளை உட்கொண்டவனும் மனம் திருந்தி விஷ்ணுவின் ஆலயம் சென்று துளசி தீர்த்தம் உட்கொண்டால் புனிதம் அடைகின்றான்.

## நெல்லியின் உயர்வு

நெல்லி இலையால் அர்ச்சனை செய்தாலும், நெல்லிக் கனியைப் படைத்தாலும் மஹா விஷ்ணு மனம் மகிழ்வார் நெல்லி மரம் உள்ள வீட்டில் பூதப் பிரேத ஏவல் சூன்யம் நெருங்காது ஏகாதசியில் நெல்லி நீரில் நீராடி துவாதசியில் நெல்லிக்காய் மட்டும் உண்பவன் கங்கையில் நீராடிய பலனும், காசியில் வாசம் செய்த பலனும் பெறுகின்றான், நெல்லி உள்ள இடத்தில் திருமால் திருமகளுடன் தங்குகின்றார். சூரியன் தவிர மற்று எல்லா தேவர்களையும் நெல்லிக்கனியை கொண்டு பூஜிக்கலாம்.

## வன்னி மரம்

விநாயகப் பெருமானுக்கும் சனி பகவானுக்கும் பிரியமான தாவரம் வன்னி மரமாகும். வன்னி மரக் காற்றுக்கு நச்சுப் பொருளை முறிக்கும் ஆற்றல் உள்ளதாக கண்டுள்ளனர், விஷக்கடிகளால் ஏற்படும் புண்களையும், திறபேதங்களையும் வன்னி மரக் காற்று குணப்படுத்திவிடும் என்று கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவில் நிற்க வேண்டியவை

மாணிக்கத்தை நீரில் கழுவித் தெரிந்து கொள்ள வேண்டும்
குதிரையை ஓட்டிப் பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும்
தங்கத்தை தீயில் இட்டு தெரிந்து கொள்ள வேண்டும்
நண்பர்களை தாழ்ந்த காலத்தில் தெரிந்து கொள்ள வேண்டும்.

## முகூர்த்த காலங்களில் தேங்காய் உடையும் பலன்கள்

முகூர்த்தத்தின் போது தேங்காய் உடைக்கும்போது தேங்காயானது முடிபெருத்து அடி சிறுத்து வட்டமாக உடைந்தால் லக்ஷ்மிகரமாக விளங்கும். மூன்று பங்கு சிரசிலும் அடியில் ஒரு பங்கும் உடைந்தால் சந்தோஷம் ஏற்படும். ஐந்தில் இரண்டு பங்காக உடைந்தால் மாறாத செல்வம் ஏற்படும்.

உடைந்து நரம்பு பிடித்தால் வாழ்வு வளம் பெறும். உடையும் போது தெரியும்படி உடைபட்டால் மரணமுண்டாகும். அறு பங்கு நான்கு பங்காக உடைந்தால் துன்பங்கள் நேரும். ஓடு விட்டால் வறுமை ஏற்படும். அழுகல் ஒல்லியாயிருந்தாலும் சொல்ல முடியாத துன்பம் நேரிடும். நடுவில் பிளந்தால் விஷேட நன்மை ஏற்படும். சரிபாதியாகப் பிளந்தால் குடும்பத்தில் மங்கள காரியம் ஏற்படும்.

## கோலமிடும் கோதைகளுக்கு சில குறிப்புகள்

1) வீட்டு வாசலில் சூரியோதயத்திற்கு முன்னர் கூட்டி, சாணம் தெளித்து கோலம் இடுவது சாலவும் நன்று.

2) கணவன் வெளியே கிளம்பு முன்னர் கோலமிட்டு விடவேண்டும்.

3) சுபகாரியங்களுக்கு இரட்டை இழைக்கோலமும் அசுபகாரியங்களுக்கு ஒரு இழைக்கோலமும் போடவேண்டும்.

4) வேலையாட்களைக் கொண்டு கோலமிடுதல் கூடாது.

5) திவஷ நாட்களில் கோலமிடுதல் ஆகாது. அன்று மாலையில் வாசலில் கோலமிடலாம்.

6) கோலமிடுவதால் அந்த வீட்டை நெருங்க மூதேவி அஞ்சுவாள்.

7) முத்துப்போல கோலமிட்ட இல்லத்தை நெருங்க ஸ்ரீதேவியானவள் மிகவும் ஆசைப்படுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவியங்களின் கடைசிப் பிள்ளைகள் ஞானிகள்

காவிய ஆசிரியர்கள் அனைவருமே தத்தம் காவியத்தில் வரக் கூடிய சகோதரர்களாகிய பாத்திரங்களின் பண்புகளை அமைக்கும் போது கடைசிப் பிள்ளையை ஞானியாகவே சிருஷ்டித்து உள்ளனர்.

1. இராமனாதியர்களில் ஞானி – சத்ருக்கன் அவன் கடைசி,
2. இராவணாதியர்களில் ஞானி – விபீடணன் அவன் கடைசி.
3. துரியோதனாதியர்களில் ஞானி – விகர்ணன் அவன் கடைசி.
4. சூரபத்மனாதியர்களில் ஞானி – தாரகாசுரன் அவன் கடைசி.
5. பாண்டவர்களில் ஞானி – சகாதேவன் அவன் கடைசி.

## கந்தன் என்ற சொல்லின் பொருள்

கந்தன் என்ற சொல்லுக்கு மூன்று கருத்துக்கள் உண்டு.

1) பகைவனுடைய ஆற்றலை வற்றச் செய்பவன்.
2) ஒன்றாகப் பொருந்தினவன்.
3) யானை கட்டும் தறி.

### 1) பகைவனுடைய ஆற்றலை வற்றச் செய்பவன்

கந்தபுராணத்தில் முருகப்பெருமான் பகைவனாகிய சூரபன் மனை கொல்லவில்லை. அவனின் ஆற்றலைக் குறைத்து மயிலாகவும் சேவலாகவும் ஆக்கினான். எனவே பகைவனின் ஆற்றலைக் குறைத்தவன் என்பதாகும்.

### 2) ஒன்றாகப் பொருந்தினவன்

ஆறு திருமேனிகளும் ஒன்றாகப் பொருந்தினவன் கந்தன்.

### 3) யானை கட்டும் தறி

இங்கு யானையாகிய ஆன்மாக்களுக்கு பற்றுக்கோடாக இருப் பவன் என்பதும் ஒரு கருத்தாகும்.

## நல்லவர்கள் இயல்பு

சந்தனமரத்தைச் சுற்றி பாம்புகள் இருக்கும். பாம்போ விஷ முள்ள ஜந்து. அந்தப்பாம்பின் விஷத்தால் சந்தனமரம் கெடுவ தில்லை. சந்தனமரம் எல்லோருக்கும் உபயோகத்தை செய்து வரு கிறது. அதுபோல நல்லவர்களுக்கு கெட்டவர்கள் சேர்க்கை ஏற்பட் டாலும் அவர்கள் கெட்டவர்களாக மாறாமல் சந்தன மரத்தைப் போல் உலகுக்கு நன்மை புரிந்து வருவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமாயணத்தில் கம்பன் காட்டும் கருத்து

## உழுந்தும் - எள்ளும்

இராமாயனத்தில் சீதையின கல்யாணத்தின் பொருட்டு மிதிலை நகருக்கு செல்லும் அயோத்தி மாநகர் மக்களின் கூட்டம் மிகுந்த நெரிசலாக இருந்தது. இதனைக் குறிப்பிடு போது கம்பன் அவர்களிடையே உழுந்து விழுந்தால் கீழே விழ இடமில்லை என்று கூறுகிறான். பொதுவாக நாம் கூட்டம் நெரிசல் மிகுந்திருந்தது என்று கூறும் போது எள் விழுந்தால் கீழே விழ இடம் இல்லை என்று தான் கூறுவோம். அப்படி இருக்க உழுந்தைக் கம்பன் குறிப்பிடுவானேன்? என்று சிந்திக்க வேண்டும். எள் என்பது இறந்தவர்கள் கடனுக்கு பயன்படுத்தப்படுவது. இது கல்யாணக் கூட்டம் அல்லவா எனவே தான் கம்பன் பருப்பாகிய உழுந்தைக் குறிப்பிடுகின்றான். ஆனால் இதே கம்பன் இராமனால் இராமபாணம் பட்டு மாண்டு கிடக்கும் போது இராவணனுடையஉடலில் முழுவதும் தைத்திருந்த அம்புகளைக் குறிப்பிடும் போது அங்கே எள் விழுந்தால் நுழைந்து செல்ல இடமில்லை என்கிறான். காரணம் அது மரண சம்பவம் என்பதினால் தான்.

# இராமனும் - இறைவனும் - யானையும்

இராமாயனத்தில் தொடக்கத்தில் இராமனை அறிமுகப்படுத்தும் கம்பன் இராமனை யானைக்கு ஒப்பிடுகின்றான். பல மிருகங்கள் உலகிலே உள்ளன. அவ்வாறு இருக்கும் போது யானையை மட்டும் எடுத்து ஏன் இராமனை ஒப்பிட வேண்டும்? இதே போல நால்வரில் ஒருவராகிய மணிவாசகரும் ஓரிடத்தில் ஈசனை யானைக்கு ஒப்பிடுகின்றார். இது சிந்திக்க வேண்டிய விடயம்.

யானை மீது எவ்வாறு ஏற வேண்டும். என்று சிந்தித்துப் பாருங்கள் அது காலை மடித்துப் படி போல எமக்கு அதன் மேலே ஏற வழி காட்டுகிறது. நாம் அதன் காலைப் பற்றி ஏறுகின்றோம். அத்துடன் அதுவே தனது துதிக்கையையும் தூக்கி உதவி நம்மை தனது தலைக்கு மேலேயே உட்கார வைத்துக் கொள்கிறது. காவிய நாயகனாகிய இராமனின் பண்பும் இதுவே யாகும். அவன் தன்னைத் தாள் பணிந்து நிற்பவரைத் தூக்கி தலைக்கு மேலே உன்னத பதவியில் வைத்து விடுகிறான். இது போலவே ஈசனும் செய்கின்றான். அது மட்டுமல்ல வேழமுகம் கொண்ட விநாயகப் பெருமானும் தன்னடி பணிந்து நிற்போரை உன்னத நிலைக்கு கொண்டு செல்வான் என்பதை அறியலாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு சான்றாக ஔவையார் விநாயகப் பெருமானுக்கு பூஜை செய்யும் போது சுந்தரர் வெள்ளை யானையில் ஏறி கைலாயம் செல்வதைக் கண்டு தாமும் அவருடன் செல்ல வேண்டுமென்று விரைவாகப் பூஜை செய்ய விநாயகப் பெருமான் ஔவைக்கு ஆறுதல் கூறி தனது துதிக் கையால் சுந்தரருக்கு முன்பாக கைலாயத்திலேயே சேர்ந்து விடுகின்றார்.

இதனாலேயே தான் இராமனை கம்பரும், ஈசனை மணிவாசகரும் யானைக்கு ஒப்பிடுவது மிகவும் பொருத்தமாகும்.

## பெண்களுக்கு பெருமை சேர்க்கக்கூடிய பெரும் பண்புகள்

1) பெண்கள் சூரியோதயத்திற்கு முன்னர் துயில் நீங்கி எழுதல் வேண்டும் காலைக்கடன்கள் முடித்த பின்னர் தலைசீவி நெற்றியில் திலகம் இடவேண்டும். எக்காரணம் கொண்டும் தலைவிரித்தபடி பெண்கள் திரிவதோ அல்லது நெற்றிக்கு திலகம் இடாமலோ இருக்கக்கூடாது. அவ்வாறு இருப்பின் வாழ்நாளில் பின்னர் தலை விரிகோலமாக நெற்றிக்கு திலகம் இடமுடியாது இருந்து வருந்த நேரிடும்.

2) நெற்றிக்குத் திலகம் இடும்போது ஆள்காட்டி விரலால் இடக்கூடாது. ஆள்காட்டி விரலுக்கு சுட்டு விரலென்றும் ஆணவ விரலென்றும் அழைக்கப்படும். நாம் எம்மை அறியாமல் தற்பெருமை பேசும்போது, ஆணவத்துடன் பேசும்போது கோபத்துடன் பேசும்போது அதனைக் காட்டியே பேசுவது வழக்கம். இதனால் அது ஆணவ விரல் என்று அழைக்கப்படுகிறது. அதனால் இடும்போது எங்களுக்கு நாம் அறியாமலேயே ஆணவம் சேரும் என்பது திண்ணம். எனவேதான் அதனால் இடது அணிவிரலால் (சிறு விரலுக்கு) அடுத்தது இடவேண்டும் என்று பெரியோர் கூறுவர். இது பெருமை தரக் கூடியது.

3) தற்கால இளம் பெண்கள் மட்டுமல்ல சில குடும்பப் பெண்களும் நாகரீக வளர்ச்சி என்று கருதி தனியே கறுப்பு நிற ஆடைகளை சிவப்பு நிற ஆடைகளை அணிவதும் கறுப்பு - சிவப்பு நிற ஆடைகளை சேர்த்து அணிவதும் நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது. கறுப்பு துன்பத்தைக் குறிப்பதாகும். சிவப்பு நிறம் அபாயத்தைக் குறிப்பதாகும். எனவே இவ்வாறு அறியும்போது அவ்வாறு அணிபவர்கள் வாழ்வில் துன்பங்களும் அபாயங்களும் சேர்ந்து வருவதை நாம் நிச்சயமாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் கேட்கலாம் கூறைச்சேலை சிவப்புதானே முகூர்த்த காலத்தில் அதைத்தானே அணிகிறார்கள் என்று. ஆனால் அதுதனிச் சிவப்பு அல்ல அத்துடன் அது பொன்னிறம் கலந்த மஞ்சள் சரிகை – பச்சை என்று நிறம் உள்ளதால் தோஷ மில்லை. இங்கு யாம் தனியான சிவப்பு – தனியான கறுப் பையே அல்லது அதிகமான கறுப்பையே குறிப்பிடுவதை மனதில் பதிக்கவேண்டும்.

4) பெண்கள் முந்தானையை ஆடவிட்டு நடக்கக்கூடாது. அவ் வாறு ஆடவிட்டு நடந்தால் குடும்பம் ஆடிப்போகும் என்று கூறுவார்.

5) பிள்ளைகளுக்கு பெயர் சூட்டும்போது அழகான தமிழ்ப்பெயர் களை இடுவது சாலச் சிறந்தது. நடைமுறையில் நாகரீகம் என்று கூறிக்கொண்டு செல்லப்பிராணிகளுக்கு சூட்டும் பெயர் களை சூட்டுவதால் அவர்களுக்கு அதற்கேற்றாற்போல ஆறா வது அறிவு அற்றுப் போய்விடுகிறது.

6) பெண்களின் நடை, உடை, பாவனை, உபசாரம் முதலியன சிருங்கார சேஷ்டைக்கு காரணமாக இருப்பதால் பெண்கள் அளவோடு தம்மை நடத்திக்கொள்ள வேண்டும்,

7) வீடுகளில் காலையும் மாலையும் சாம்பிராணி போன்ற சுகந்த தூபம் இட்டு நறும்புகை கமழச் செய்வதால் இலட்சுமி கடாட்சம் உண்டாகும். வாசனை உள்ள இடத்தில் இலட்சுமி தங்குவதால் சம்பந்துக்கள் பெருகும்.

8) நெருப்பை வாயினால் ஊதக்கூடாது. அசுத்தமான பொருள் எதனையும் நெருப்பிலிடல் ஆகாது. அத்துடன் பூச்சி, புழு முதலியவற்றையும் நெருப்பிலிட்டு பொசுக்குதல் ஆகாது.

9) பெண்கள் கண்ணீர் சிந்தும் இடத்தில் தேவர்கள் நுழைய மாட்டார்கள். எனவே வீட்டுக்காரன் பெண்களை மனம்நோக விடாது காப்பாற்றுதல் சுபிட்சமும், மங்களமும் பெருக வழி யாகும்.

10) பெண்கள் ஸ்நானம் செய்யும்போது மஞ்சள்பூசி ஸ்நானம் செய்வது நல்லது. மஞ்சள் பூசுவதால் முகமும் உடலும் புதுப் பொலிவு பெறுகிறது. அத்துடன் அவர்கள் முகம் இலட்சுமி கரமாக விளங்குவதுடன் மஞ்சள் நோய் நீக்கும் தன்மை கொண்டுள்ளது என்பதை நாம் உணரவேண்டும்.

11) பெண்கள் நடக்கும்போது நில மாதா வருந்தாத வண்ணம் மென்மையாக அடிமேல் அடியெடுத்து வைக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூசைக்கு பயன்படுத்தக் கூடாதவை

1) விஷ்ணுவுக்கு அட்சதையால் அர்ச்சனை செய்யக்கூடாது.

2) விநாயகப் பெருமானுக்கு துளசியால் அர்ச்சனை செய்யக் கூடாது.

3) துர்க்கையை அறுகம்புல்லால் அர்ச்சிக்கக் கூடாது.

4) சூரியனை வில்வத்தால் அர்ச்சனை செய்யக்கூடாது.

5) விஷ்ணுவுக்கு ஊமத்தம்பூவும் எருக்கலம் பூவும் கூடாது.

6) இலட்சுமியை தும்பைப் பூவால் அர்ச்சிக்கக் கூடாது.

7) சரஸ்வதியை பவளப் புஷ்பத்தால் அர்ச்சிக்கக்கூடாது.

8) வைரவப் பெருமானை மல்லிகைப்பூ நந்தியாவட்டைப் பூவினால் அர்ச்சிக்கக் கூடாது.

9) பரமசிவனை தாழம்பூவினால் அர்ச்சிக்கக்கூடாது.

10) நீர்ப்பூக்களுக்கும், வில்வம் தளிர்களுக்கும் துளசித் தளிர்களுக்கும், வெள்ளிப் பூ. தங்கப் பூ எனபனவுக்கும் பழமையில்லை. இன்னும் கங்கை முதலிய புண்ணிய திர்த்தத்துக்கும் பழமை இல்லை. இவை அபிடேக ஆராதனைக்கு நாட்பட்டாலும் உகந்தவையாகும்.

## வாழ்வில் வெற்றிபெற கைக்கொள்ள வேண்டிய நலம் தரும் நவமணிகள்

1) பிடித்தாலும் பிடிக்காது விட்டாலும் – புன்னகை உதிர்க்கத் தவறாதீர்கள்.

2) தகுதி இருந்தாலும் இல்லாது விட்டாலும் – பாராட்டுதலைத் தவிர்க்காதீர்கள்.

3) உண்மையானாலும் பொய்யானாலும் முதலில் நீங்களாக எதையும் வெளியிடாதீர்கள்

4) முடிந்தாலும் முடியாது விட்டாலும் உதவமாட்டேன் என்று கூறாதீர்கள்.

5) விரும்பினாலும் விரும்பாது விட்டாலும் வாய் நிறைய எவரையும் வரவேற்று விடுங்கள்.

6) பிடித்தாலும் பிடிக்காது விட்டாலும் நன்கு உபசரியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) அரைகுறை நண்பரானாலும் அப்போதுதான் அறிமுகமாக இருந்தவரானாலும் பண்பாக பேசுங்கள்.

8) குற்றமென்றாலும் குறையென்றாலும் அதைப் பெரிது படுத்தாதீர்கள்.

9) ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாக இருந்தாலும் எதிர்வாதம் செய்யாதீர்கள்,

## இலக்ஷ்மி கடாக்ஷம் பெறவழி

1) பூஜையில் பயன்பட்ட பூ, கெட்ட மணம்வீசும் பூ, உடைந்த ஆசனப் பலகையை உபயோகித்தல், பலரும் தூங்கிய அழுக்குடன் கூடிய கூட்டத்தில் படுத்தல், அவலட்சணமான பெண்ணின் உறவு இவற்றை நீக்கவேண்டும்.

2) மயானக்கரி, சுடுகாட்டு எலும்பு, அக்கினி, வீபூதி, அந்தணன், பருத்தி விதை, பசு, உமி, குருவின் திருவடி இவற்றை காலால் மிதிக்கக் கூடாது.

3) தன்னுடைய ஒரு காலை மற்றொரு காலினால் தேய்த்துக் கொள்ளுதலும், ஈரக்காலுடன் படுத்துக்கொள்ளுதலும், இருக்கும்போதும், படுத்திருக்கும்போதும், இரண்டு கால்களால் நடனம் செய்வதுபோல நடித்தாலும் கூடாது.

4) சதுர்த்தசி, அமாவாசை, காலை, மாலை, காலற்ற, உடலற்ற, தலையற்ற நட்சத்திர நாட்களிலும் மாதர் உறவுகூடாது.

5) ஆடையில்லாமல் படுக்கவோ, குளிக்கவோ கூடாது. துடக்கு ஆடையை அணியக்கூடாது.

6) துடைப்பத்தின் தூசி, ஆட்டின் கால்தூசி, கழுதையின் புழுதி, மாதர்களின் நடைப்புழுதி மனிதன் மேல் படக்கூடாது.

7) வில்வம், விலக்கப்பட்ட காய்கறிகள், விளாங்கனி தயிர் ஆகியவற்றை இரவில் உட்கொள்ளக் கூடாது. பகலில் படுத்துத் தூங்கக்கூடாது.

8) தலையை எச்சில் கையால் தொடுவதும் இடது கையால் தீண்டிக்கொண்டு சோம்பேறிபோல் இருப்பதும் கூடாது.

9) ஆண்கள் வெள்ளிக்கிழமை எண்ணெய் தேய்த்துக் குளித்தல் அமாவாசையில் வாசனைப்பொடி தேய்த்து குளித்தல்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) அசுத்தமாக இருக்கும்போது சூரிய சந்திர நட்சத்திரங்களை பார்த்தல் கூடாது. சூரிய உதயத்துக்குமுன் படுக்கையை விட்டு எழுதல் வேண்டும்.

11) நகம், முள், இரத்தினம், மண்கட்டி இவற்றால் தரையில் கோடு போடக்கூடாது. நீர்க்கோலம் இடக்கூடாது.

12) சந்தனம், சுகந்தம், புஷ்பம், தண்ணீர், இரத்தினம் இவற்றைப் பெறும்போது வணங்கி கண்களில் ஒற்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

15) நீங்காத செல்வம் நிறைந்து வாழ விரும்புபவன் பிறர் தேடி வைத்த பொருட்களில் விருப்பம் கொள்ளல் ஆகாது.

16) பெருந்தீனி இன்றி அளவோடு உண்ணவேண்டும். அன்னத்தைக் கவளமாக உருட்டி விளையாடுதல் கூடாது

17) முகம், செவி, மூக்கு, பாதம், பின்பக்கம், இருகண்கள் ஆகிய இடங்களில் சந்தனத்தை பூசிக்கொள்ளுதல் கூடாது.

## கீதா உபதேசம்

கீதா சாராம்சம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது

எது நடக்கின்றதோ அது நடக்கிறது

எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடைய எதை இழந்தாய்

எதற்காக நீ அழுகின்றாய்? எதை நீ கொண்டுவந்தாய்? அதை நீ இழப்பதற்கு

எதை நீ படைத்திருந்தாய் அது வீணாகுவதற்கு

எதை நீ எடுத்துக்கொண்டாயோ அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது

எதைக் கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது

எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவருடையதாகிறது

மற்றொரு நாள் வேறு ஒருவருடையதாகும் இந்த மாற்றம் உலக நியதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனை அடி - பலன்கள்

வீடு, கூடம், அறைகள் முதலிய அமையவேண்டிய நீள அகலங்களும் அவற்றின் பலாபலன்களும்

| | | |
|---|---|---|
| 6 | அடி | நன்மை |
| 7 | அடி | மத்திமம் |
| 8 | அடி | இராஜ்யம் பண்ணுதல் |
| 9 | அடி | பீடை |
| 10 | அடி | பால், சாதம் உண்டு |
| 11 | அடி | (நன்மை) புத்திர சம்பத்து |
| 12 | அடி | புத்திர தோஷம் |
| 13 | அடி | வியாதிகள் |
| 14 | அடி | சஞ்சலமுண்டு |
| 15 | அடி | உடனே துன்பம் |
| 16 | அடி | மிகுந்த செல்வமுண்டு |
| 17 | அடி | எதிரியும் அஞ்சி நிற்பான் |
| 18 | அடி | அமர்ந்த மனை பாழாகும் |
| 19 | அடி | தரித்திரம் – புத்திரவியாதி |
| 20 | அடி | இன்பம் தரும் |
| 21 | அடி | மூதேவி வாசம் |
| 22 | அடி | எதிரி அஞ்சுவான் |
| 23 | அடி | தீது உண்டாகும் |
| 24 | அடி | மனையாள் அதிஷ்டம் |
| 25 | அடி | திருவாழ்வு உண்டாகும் |
| 26 | அடி | சம்பத்து உண்டாகும் |
| 27 | அடி | தெய்வகடாட்சம் உண்டு |
| 28 | அடி | மிகுந்த செல்வம் உண்டு |
| 29 | அடி | பால் பாக்கியம் உண்டாகும் |
| 30 | அடி | இலட்சுமி கடாட்சம் |
| 31 | அடி | மனையாள் இறப்பு |
| 32 | அடி | பழைய பொருள் வரும் |
| 33 | அடி | நன்மை |
| 34 | அடி | குடி விட்டோடும் |
| 35 | அடி | இலட்சுமி கடாட்சம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36 அடி சுகமுண்டாகும்
37 அடி ஆண் மகவுண்டு
38 அடி பிரம்ம ராக்ஷதர் குடிபுகுவர்
39 அடி நன்மை உண்டாகும்
40 அடி எதிரிகளால் எந்நேரமும் தீது
41 அடி குபேர சம்பத்து
42 அடி இலட்சுமி வாசம்
43 அடி நன்மை கொடாது
44 அடி கண் போம்
45 அடி சற்புத்திரர் உண்டு
46 அடி வீடு விட்டோட்டும்
47 அடி எந்நாளும் வறுமையுண்டு
48 அடி வீடு தீப்படும்
49 அடி மூதேவி வாசம்
50 அடி பயம்
51 அடி அற்ப புத்திரர்
52 அடி அஷ்ட லட்சுமி
53 அடி வீண் செலவு
54 அடி அரச தண்டனை
55 அடி பந்து ஜன விரோதம்
56 அடி குபேர செல்வம்
57 அடி புத்திரர் அற்பம்
58 அடி விரோதம் உண்டு
59 அடி விசமை
60 அடி கூடாது
61 அடி பகையுண்டு
62 அடி வறுமையுண்டு
63 அடி நல்லது
64 அடி வெகு சம்பத்துண்டு
65 அடி ஸ்திரிநாசம்
66 அடி பூபதி யோகம்
67 அடி பயமுண்டு
68 அடி திரவிய லாபம்
69 அடி அக்கினி உபாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70 அடி அன்னியர்க்கு பலம்
71 அடி இராஜப்பிரியம்
72 அடி வெகுபாக்கியவான்
73 அடி குதிரை கட்டி வாழ்வான்
74 அடி பிரபல விருத்தி
75 அடி சுகமுண்டு
76 அடி அற்ப புத்திரர்
77 அடி ஆனை கட்டி வாழ்வான்
78 அடி புத்திரர் இல்லை
79 அடி கன்று காலி விருத்தி
80 அடி லட்சுமி வாசம்

## அரசமரத்தின் மகிமைகள்

அரசமரத்தின் வேரில் பிரம்மாவும் நடுவில் விஷ்ணுவும், மேல் பாகத்தில் சிவனும் வசிக்கிறார்கள். அரசமரத்தை வைத்தவன் குலம் நிலைக்கும். செல்வமும் ஆயுளும் பெருகும். பித்ருக்கள் நரகத்திலிருந்து கரையேறுவர். அரசமாத்தடியில் ஏழை ஒருவனுக்கு உணவளித்தால் கோடி பிராமண போஜனம் செய்த பலன் உண்டு அரசமரத்தடியில் செய்யும் ஜபமும், ஹோமமும் தெய்வ வழிபாடும் குறைவற்ற பலனைத்தரும் வேள்விகளுக்காக அரசை வெட்டிப் பயன்படுத்தினால் மறுமை சுகமாக அமையும். வேள்வியைத்தவிர வேறுகாரியத்துக்காக அரசை வெட்டினால் பித்ரு தேவதைகளுக்கு கேடு செய்வதாக ஆகும். அரச மரத்தை வழிபட்டால் எல்லாத் தேவதைகளையும் வழிபட்டதாக ஆகும். ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியபகவானை அரசமரத்தில் வழிபட்டு வலம்வந்தால் நோய்கள் அகலும். திங்கட்கிழமைகளில் பிறைசூடிய பரமசிவனை வழிபட்டு வலம் வந்தால் மங்களம் நிரம்பும். செவ்வாய்க்கிழமைகளில் தேவியை அதில் வழிபட்டு வலம் வந்தால் வெற்றி பெறலாம். புதன் கிழமைகளில் நாராயணமூர்த்தியையோ, செல்வ தேவதையான இலட்சுமியையோ வழிபட்டு வந்தால் வியாபாரம் செழிக்கும். வியாழக்கிழமைகளில் தட்சிணாமூர்த்தியை அதில் வழிபட்டு வலம் வந்தால் கல்விபெருகும். வெள்ளிக்கிழமைகளில் அதில் இலட்சுமியை வழிபட்டுவர செல்வம் பெருகும். சனிக்கிழமைகளில் நாராயணமூர்த்தியை அதில் வழிபட்டு வலம்வர துக்கங்கள் குறைகள் நீங்கி பாக்கியங்கள் உண்டாகும். அரசமரத்தை வழிபட திங்களும் சனியும் சிறந்த நாட்களாகும். தினம் 108 தடவை 45 நாட்களுக்கு அரசமரத்தை வழிபட்டு வலம் வந்தால் தீராத கடன், கிரகபீடை, பேய், பிசாசு, பயம் நீங்கும். செல்வம் பெருகும் ஆரோக்கியம் உண்டாகும். தீராத நோய்களால் துன்பப்படும் மனிதர்கள் நம்பி ஈடுபடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணெய் வைத்து நீராடும் நாட்களும் அவற்றின் பலன்களும்

| | | |
|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | — | அழகு போகும் |
| திங்கட்கிழமை | — | பொருள் சேரும் |
| செவ்வாய்க்கிழமை | — | ஆபத்து நேரிடும் |
| புதன்கிழமை | — | புத்தி விஷேடம் |
| வியாழக்கிழமை | — | அறிவு அழியும் |
| வெள்ளிக்கிழமை | — | பொருள் நஷ்டம் |
| சனிக்கிழமை | — | சம்பத்து உண்டாகும் |

## வணங்க வேண்டிய முறை

**1) திருமூர்த்திகளுக்கு**

சிரசின்மேல் 12 அங்குலம் உயர்த்தி கைகூப்பி வணங்குதல் வேண்டும்.

**2) மற்றைய தேவர்களுக்கு**

சிரசின்மேல் கைகூப்பி வணங்கவேண்டும்.

**3) குருவுக்கு**

நெற்றியில் கைகூப்பி வணங்கவேண்டும்.

**4) அரசர்களுக்கும், பிதாவுக்கும்**

வாய்க்கு நேரே கைகூப்பி வணங்குதல் வேண்டும்

**5) அந்தணருக்கு**

மார்பில் கைகூப்பி வணங்குதல் வேண்டும்.

**6) தாய்க்கு**

வயிற்றில் கைவைத்து வணங்குதல் வேண்டும்.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக நாயக

| | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|
| கிரக லிங்கம் | ஆண் | பெண் | ஆண் | அலி |
| கிரக நிறம் | சிவப்பு | வெள்ளை | சிவப்பு | பச்சை |
| கிரக ஜாதி | க்ஷத்திரியர் | வைசியர் | க்ஷத்திரியர் | வைசியர் |
| கிரக பிணி | பித்தம் | சேத்துமம் | பித்தம் | வாதம் |
| கிரக திக்கு | நடு | தென்கிழக்கு | தெற்கு | வடகிழக்கு |
| கிரக ரத்தினம் | மாணிக்கம் | முத்து | பவளம் | பச்சை |
| கிரக தானியம் | கோதுமை | நெல் | துவரை | பயறு |
| கிரக புஷ்பம் | செந்தாமரை | வெள்ளரலி | சண்பகம் | வெண்காந்தள் |
| கிரக வாகனம் | மயில் தேர் | முத்துவிமானம் | அன்னம் | குதிரை |
| கிரகச் சுவை | காரம் | தித்திப்பு | துவர்ப்பு | உப்பு |
| கிரக உலோகம் | தாமிரம் | ஈயம் | செம்பு | பித்தளை |
| கிரகங்கள் இராசியில் நிற்கும் காலம் | 1 மாதம் | 2 ¼ நாள் | 1 ½ மாதம் | 1 மாதம் |
| கிரக தேவதை | சிவன் | பார்வதி | சுப்பிரமணியர் | விஷ்ணு |
| கிரக வஸ்திரம் | சிவப்பு | வெள்ளை | சிவப்பு | பட்டு |
| கிரக ஆசனம் | வட்டம் | சதுரம் | திரிகோணம் | அம்பு |
| கிரகங்களின் தேவியர் (மனைவியர்) | உஷா பிரத்யுஷா | ரோகிணி | சக்திதேவி | ஞானதேவி |
| கிரகத்துக்கு உகந்த நாட்கள் | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயகர்கள் விபரம்

| புதன் | வியாழன் | வெள்ளி | சனி | இராகு | கேது |
|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | அலி | பெண் | அலி |
| ச | மஞ்சள் | வெள்ளை | கருப்பு | கருப்பு | சிவப்பு |
| பியர் | பிராமணன் | பிராமணன் | சூத்திரர் | சங்கிரம ஜாதி | சங்கிரம ஜாதி |
| ம் | வாதம் | சேத்துமம் | வாதம் | பித்தம் | பித்தம் |
| ழக்கு | வடக்கு | கிழக்கு | மேற்கு | தென்மேற்கு | வடமேற்கு |
| ச | புஷ்பராகம் | வைரம் | நீலம் | கோமேதகம் | வைடூரியம் |
| | கடலை | மொச்சை | எள்ளு | உளுந்து | கொள்ளு |
| ங்காந்தள் | முல்லை | வெண் தாமரை | கருங்குவளை | மந்தாரை | செவ்வல்லி |
| ரி | யானை | கருடன் | காகம் | ஆடு | சிங்கம் |
| | தித்திப்பு | தித்திப்பு | கைப்பு | புளிப்பு | புளிப்பு |
| ளை | பொன் | வெள்ளி | இரும்பு | கருங்கல் | குருக்கல் |
| தம் | 1 வருடம் | 1 மாதம் | 2 ½ வருடம் | 1 ½ வருடம் | 1 ½ வருடம் |
| ணு | பிரமன் | லஷ்மி | இயமன் | பத்திரகாளி | இந்திரன் |
| | மஞ்சள் | வெண்பட்டு | கருப்புப்பட்டு | கருப்பு வஸ்திரம் | பலவர்ண வஸ்திரம் |
| | நீண்டசதுரம் | ஐங்கோணம் | வில் | கொடி | முறம் |
| தேவி | தாராதேவி | சுகீர்த்தி | நீலா | சிம்ஹி | சித்திரலேகா |
| | வியாழன் | வெள்ளி | சனி | செவ்வாய் | ஞாயிறு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்

அணைந்தும் அணையாத சோதியாய்
அன்பு, பண்பு, பாசம் என்ற
முக்குணங்களிலும் சிறந்து வாழ்ந்து
அருட்பெரும் சோதியில் சங்கமித்த
எமது குடும்பத் தலைவரின்
இறுதிச்சடங்கு, அந்தியேட்டி வைபவம் முதலியவற்றில்
பங்குகொண்டும் மற்றும் பல்வேறு வகையில்
தேடி நாடிவந்து உதவி ஒத்தாசை புரிந்து
எம்மைப் பெருமைப்படுத்திய
உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்களுக்கும்
இன்றைய வருஷாப்பிய நிகழ்ச்சியில் பங்குகொண்டு
சிறப்பித்த யாவருக்கும்
எமது உளமார்ந்த நன்றி.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

சாந்தி அச்சகம் - நாச்சிமார்கோவிலடி போன்: 021- 2821

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org